# வருடாந்த செயலாற்றுகை மற்றும் நிதி அறிக்கை - 2020

## (உள்ளகக் கணக்காய்வுக் கிளை)

யாழ் மாவட்ட செயலக உள்ளகக் கணக்காய்வுக் கிளை 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40ம் பந்தியில் விபரிக்கப்பட்டவற்றிக்கமைவாக **மற்று**ம் நிதி பிரமாணம் 133 134 இற்கு இணங்க, பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இக் கிளையினால் மாவட்டச்செயலகம், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களினை உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதுடன் இதற்கு மேலதிகமாக புலனாய்வு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2020ம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை

1. ஆபத்தினை அடிப்டையாகக்கொண்ட வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத்திட்டம், காலாண்டு மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தமை.

2. யாழ் மாவட்டச்செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் 15 பிரதேச செயலகங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

| தொடர் இல | திணைக்களம்/ பிரதேச செயலகம் | உள்ளகக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட தடவைகள் | வழங்கப்பட்ட ஆலோசனைகள் |
|---|---|---|---|
| 01 | **நல்லூர்** | **09** | **04** |
| 02 | **யாழ்ப்பாணம்** | **11** | **03** |
| 03 | **கோப்பாய்** | **14** | **04** |
| 04 | **தெல்லிப்பளை** | **09** | **04** |
| 05 | **உடுவில்** | **10** | **03** |
| 06 | **சண்டிலிப்பாய்** | **13** | **03** |

| | | | |
|---|---|---|---|
| 07 | **சங்கானை** | 08 | 03 |
| 08 | **கரவெட்டி** | 12 | 02 |
| 09 | **பருத்தித்துறை** | 12 | 02 |
| 10 | **சாவகச்சேரி** | 10 | 04 |
| 11 | **காரைநகர்** | 07 | 01 |
| 12 | **வேலனை** | 12 | 02 |
| 13 | **மருதங்கேணி** | 09 | 03 |
| 14 | **ஊர்காவற்துறை** | 04 | 03 |
| 15 | **நெடுந்தீவு** | 01 | 02 |
| 16 | **மாவட்டச்செயலகம்** | - | 27 |
| | மொத்தம் | 141 | 70 |

3. **யாழ் மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் நேர்வரிசை அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளைமேற்கொண்டு ஆலோ**சனைகள் வழங்கப்பட்டுள்ளது.

4. மாவட்டசெயலகத்திலும், பிரதேசசெயலகங்களிலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தி உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பரிசீலித்தமை.

| இல | திணைக்களம்/பிரதேச செயலகம் | 1ம் காலாண்டு | 2ம் காலாண்டு | 3ம் காலாண்டு | 4ம் காலாண்டு |
|---|---|---|---|---|---|
| 01 | மாவட்டச்செயலகம் | 2020.03.03 | 2020.05.26 | ..... | 2020.12.09 |
| 02 | யாழ்ப்பாணம் | 2020.02.13 | 2020.06.19 | ..... | 2020.12.24 |
| 03 | நல்லூர் | 2020.02.25 | 2020.05.14 | ..... | 2020.12.08 |
| 04 | சாவகச்சேரி | ..... | 2020.05.20 | 2020.09.22 | 2020.11.13 |
| 05 | பருத்தித்துறை | 2020.03.01 | 2020.05.22 | ..... | 2020.12.07 |
| 06 | கரவெட்டி | 2020.03.01 | 2020.05.22 | ..... | 2020.11.25 |
| 07 | கோப்பாய் | 2020.02.20 | 2020.06.23 | ..... | 2020.12.08 |
| 08 | சங்கானை | 2020.03.10 | 2020.06.25 | ..... | 2020.11.26 |
| 09 | சண்டிலிப்பாய் | 2020.03.17 | 2020.06.25 | ..... | 2020.12.03 |
| 10 | உடுவில் | 2020.03.12 | 2020.06.16 | ..... | 2020.07.12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | தெல்லிப்பளை | 2020.03.12 | 2020.06.16 | ..... | 2020.11.26 |
| 12 | வேலனை | ..... | 2020.05.20 | 2020.09.29 | 2020.07.12 |
| 13 | நெடுந்தீவு | 2020.03.12 | 2020.05.21 | 2020.09.28 | 2020.11.30 |
| 14 | ஊர்காவற்துறை | ..... | 2020.05.19 | 2020.09.29 | 2020.12.04 |
| 15 | மருதங்கேணி | ..... | 2020.05.14 | 2020.09.17 | 2020.11.26 |
| 16 | காரைநகர் | ..... | 2020.06.25 | 2020.09.14 | 2020.12.07 |

5. சொத்து முகாமைத்துவ முறைமைளை மதிப்பீடு செய்தமை.

6. தவறுகள் மோசடிகளை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் ஆராய்ந்தமை.

7. நிதி கூற்றுக்கள் மற்றும் கணக்குகளின் உண்மைத் தன்மையையும் செம்மையான தன்மையையும் பரிசோதித்தமை.

8. சேவையிலுள்ள அலுவலர்களின் வினைத்திறனான செயற்பாட்டினை மதிப்பீடு செய்தமை.

9. சட்டங்கள், நியதிகள், சுற்றறிக்கைகள், நிதிப்பிரமாணங்கள், தாபனவிதிக்கோவைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கிணங்க செயற்படுவதை அவதானித்தமை.

10. செயற்திட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கியமை.

11.குறிப்பிடப்பட்ட காரணங்களிற்காக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.